**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. 110/2022 PW1**

28.03.2025 **வ.ம.சா.1 திரு. கண்ணன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நான் விவசாயம் மற்றும் மாட்டு வண்டியில் மளிகை சாமான் ஏற்றி இறக்கும் வேலையும் செய்து வருகிறேன். தினமும் எனக்கு ரூ. 1000 குறையாமல் வருமானம் வரும். மாதம் ரூ. 15000/- முதல் 17000/- வரை சம்பாதிப்பேன். மாதம் எனக்கு குடும்பச் செலவு ரூ. 5000/-க்கு குறைவாகத்தான் ஆகும். ரூ. 10000/- எனது மாதச் சேமிப்பில் இருந்து வருகிறது. மேற்படி சேமிப்பு தொகையை நான் வங்கியில் போட மாட்டேன். சீட்டு நடத்துபவர்களிடம் செலுத்தி பணத்தை பெருக்கி வருவேன். 1ம் பிரதிவாதியின் கணவர் பெயர் ரவி. ரவியின் தகப்பனார் பெயர் ராயர் நாயுடு. ரவி உடன் பிறந்தவர்கள் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ரவி வசிக்கும் தெரு பெயர், அவரது வீட்டு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. இதற்கு முன்பாக ரவியிடம் நான் கொடுக்கல் வாங்கல் எதுவும் செய்ததில்லை. அதிகமான தொகையை கடனாக கொடுக்கும் போது கிரைய ஒப்பந்தமோ, அடமானக் கடன் பத்திரமோ போட்டு தான் கொடுக்கப்படும் என்றால் பாண்டு எழுதிக் கொடுத்து என்னிடம் கடன் வாங்கினார். ரவியுடன் சுமார் 25 வருடம் பழக்கம். ரவி என்னிடம் 20.01.2020ல் ரூ. 3 லட்சம் அவசரம் என்று சொல்லி கேட்டார். ரவி என்னுடனே வந்து பணத்தை என் வீட்டில் வைத்து வாங்கிக் கொண்டார். பணம் கொடுக்கும் போது என்னுடன் யாரும் இல்லை ஆனால் ரவி சாட்சிக்காக நபர்களை அழைத்து வந்தார். சாட்சியாக தேவனந்தல் கிராமத்தைச் சேர்ந்த ஆறுமுகத்தை அழைத்து வந்தார். 2வது சாட்சியாக திருவண்ணாமலையை சேர்ந்த வளையல்காரத் தெருவைச் சேர்ந்த குமார் என்பவரை அழைத்து வந்தார். பாண்டை ஏழுமலை என்பவர் எழுதினார் அவர் நொச்சிமலை கிராமத்தைச் சேர்ந்தவர். ஏழுமலையின் அப்பா பெயர் எனக்கு தெரியவில்லை. நான் சொன்னது போல் ரவியோ மேற்படி 3 சாட்சிகளோ என் வீட்டிற்கு நான் சொன்ன நாளில் என் வீட்டிற்கு வந்து பணம் வாங்கவேயில்லை என்றால் சரியல்ல. நான் 500 ரூபாயா் நோட்டுகளாக கொடுத்தேன். 500 ரூபாய் நோட்டு 600 நோட்டுக்கள் கொடுத்தேன். நான் வங்கியில் இருந்து மேற்படி பணத்தை எடுக்கவில்லை என் வீட்டில் சேர்த்து வைத்திருந்த பணமாகும். நான் சொன்னது போல் பணத்தை சேமித்து வைக்கவில்லை என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3 பாண்டுகளும் ஒரே தேதியில் எழுதப்பட்டதா என்றால் இல்லை. 20.01.2020ல் ரூ. 3 லட்சத்திற்கு ஒரு பாண்டும், 25.03.2020ல் ரூ. 3 லட்சத்திற்கு ஒரு பாண்டும், 30.05.2020ல் ரூ. 3 லட்சத்திற்கு ஒரு பாண்டும் மொத்தம் ரூ. 9 லட்சம் கொடுத்தேன். ரவியின் கையொப்பத்தை நாங்களகவே பொய்யாக போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

ஏழுமலைக்கு பாண்டு எழுதுவதற்கு உரிமம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.
(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.